ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2473/25 - 2026 ජනවාරි මස 30 වැනි සිකුරාදා - 2026.01.30

*2473/25 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.பி. 3/2025

**(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டம்**

(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குப்படுத்தல்) சட்டத்தின் 66 ஆம் பிரிவின்கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

**கலாநிதி அனில் ஜயந்த பிரனாந்து,**
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 12.

**ஒழுங்குவிதிகள்**

1974, மே 10 ஆந் திகதிய 111 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறாக, 1954, ஒற்றோபர் 15 ஆம் திகதிய 10724 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1954 ஆம் ஆண்டு கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) ஒழுங்குவிதிகள், அதன் 3 ஆம் ஒழுங்குவிதியில் "அல்லது பெண்கள் மலசலகூட பணிப்பெண் என்ற தன்மையில் ஏதேனும் வதிவிடவசதியுள்ள விடுதியில் மு.ப. 6 மணிக்கு முன்னர் அல்லது பி.ப.6 மணிக்குப் பின்னர் தொழிலுக்கமர்த்தப்படலாம்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அல்லது பெண்கள் தூய்மை பணிப்பெண் "அல்லது உணவு மற்றும் பாணம் பெண் உணவுமேலாளர் என்ற தன்மையில் ஏதேனும் வதிவிடவசதியுள்ள விடுதியில், பி. ப. 6 மணிக்குப் பின்னர் அல்லது அடுத்தநாள் மு. ப. 6 மணிக்கு முன்னர் தொழிலுக்கமர்த்தப்படலாம்